**C.C. No.** 116/2021 **Date : 23.02.2026**

**PW1 – முருகராஜ் த/பெ.சத்தியநேசன்**

எதிரி ஆஜர்.

எதிரி தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 311 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் சரண்யா ஏஜென்சி என்ற பெயரில் தொழில் செய்து வருகிறேன். சன்ஃபீஸ்ட், ஆசிர்வாத் போன்ற நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு சப் டீலராக தொழில் செய்கிறேன். சிகரெட் போன்ற பொருள்களுக்கும் சப் டீலராக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரி எனக்கு எந்த வகையில் பழக்கம் என்றால் கடன் வாங்குவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பு இருந்தே, எதிரி எனக்கு நட்பு ரீதியாக நன்கு பழக்கமானவராக இருந்தார். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரி பட்டாசு கடை வைத்து நடத்தி வருகிறார். எதிரியின் பட்டாசு கடை எந்த இடத்தில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால், சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து மணிநகர் செல்லும் சாலையில் உள்ளது. எதிரியின் கடை அல்லது வீட்டிற்கு நான் சென்றதில்லையென்றால் சரியல்ல. அவரது வீட்டிற்கு சென்று உள்ளேன். எதிரியின் வீட்டிற்கு எந்த தேதியில் சென்றேன் என்றால், தேதி ஞாபகம் இல்லை. எதிரி கொடுத்த

காசோலை திருப்பப்பட்டதும் பணத்தினை கேட்டு இரண்டு முறை சென்றேன்.

2) சிவகாசி, வேலாயுதம் ரஸ்தாவில் டீக்கடை வைத்து நடத்தி வந்த கருப்பசாமி என்பவர் எனது வாடிக்கையாளர் என்றால், என்னிடம் 200 வாடிக்கையாளர்கள் இருந்தனர் அதனால் கருப்பசாமி யார் என்பது எனக்கு சரியாக தெரியவில்லை. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. மேற்படி வேலாயுதம் ரஸ்தாவில் டீக்கடை வைத்து நடத்தி வந்த கருப்பசாமி என்னிடம் கடன் வாங்கி இருந்தாரா என்றால், கருப்பசாமி என்பது எனக்கு யாரென்று தெரியவில்லை. எதிரி நாகராஜன் என்னிடம் நான் கூறியது போல் 2020 டிசம்பர் மாதத்தில் வாங்கிய கடனை தவிர வேறு கடன் எதுவும் என்னிடம் வாங்கினாரா என்றால், இல்லை. பொதுவாக ஒரு நபருக்கு கடன் கொடுக்கும்போது அதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணங்கள் எழுதி வாங்கப்படுவது வழக்கம் என்றால் சரிதான்.

3) எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் அதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் எதிரி எனது நண்பர் என்பதால் எழுதி வாங்கவில்லை. என்னிடம் எதிரி கடன் வாங்கியதாக கூறப்படும் நாளுக்கு முன்னர் எந்த தேதியில் என்னிடம் எதிரி கடன் கேட்டார் என்றால் தேதி ஞாபகம் இல்லை மூன்று முறை கேட்டார். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக கூறப்படும் நாளுக்கு முன்னர் மூன்று முறை கேட்டார் என்ற விவரத்தை எனது தனி புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால்

சரிதான். எனது செல்போன் எண் 9159592791 ஆகும். மேற்படி செல்போன் எண்ணை நான் சுமார் 20 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறேன். மேற்படி செல்போன் எண்ணில் இருந்து எதிரியையும் அழைத்து பேசியுள்ளேன்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**